முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 945

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.05.2022, ஞாயிற்றுக்கிழமை

1. கலியுகத்தை ஞானயுகம் ஆக்க
கந்தவேலன் என் சூட்சுமமாகவே வந்த
அழியாமை பெற்ற மாதவசியே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது தகர்திங்கள்
அரங்கன் பலம் பெற எடுத்துரைப்பேன்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 18ம் நாள், 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
வாசி வென்ற ஞானியர் கூட்டமெல்லாம்
வலம் வந்து அரங்கனை காத்துவர
3. வருகின்ற மக்களுக்கு அரங்கன் மூலம்
வையகத்தில் எல்லா ஞானிகளின் ஆசியும் கிட்டும்
தருகின்ற அரங்கன் அமுதின் மூலம்
தரணியோர்க்கு பசிபிணி சகல ரோகங்களும் அகன்றோடும்
4. ஓடியே அருமருந்து எனும் அற்புதத்தை
ஓங்காரக் குடில் கொண்டு
உலகமெல்லாம் அன்னதானம் ஆக்கி
உயர்சேவையாற்றும் அரங்கனே
5. அரங்கனே கலியுகத்தின் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே உலகை மீட்கும் மகா சக்தியாகும்
வரமென அரங்கன் கொள்கை ஏற்றால்
வையகம் ஞான யுகமாற்றம் பெறக்கூடும்
6. கூடவே இந்த அற்புதத்தை
குறையில்லா ஆறுமுகப்பெருமான் யான்
சுடரேற்றி வணங்கும் மக்களுக்கெல்லாம்
சூட்சுமமாக அரங்கன் வழி வந்து அருளுகின்றேன்
7. அருளவே அற்புதம் நடத்துகின்ற அரங்கனின் மலரடி
ஆறுமுகன் என் சக்தி சூழ்ந்த உயரடியாகும்
ஆகவே உலகமக்கள் இணைந்து அரங்கனை வணங்கித் தொடர்ந்து ஐயமற
ஆறுமுகன் என் வழிபாட்டை அகிலமெங்கும் செய்துகொண்டு அன்னதான சேவை பெருக்க

8. பெருக்கவே பேருலகம் பேரழிவின்றி
பிரபஞ்சமெங்கும் பிரணவ சக்திகூடி
வருமுலகில் ஆறுமுகன் என் ஆட்சி
வல்லமைபட அரங்கன் வழி நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–